**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2022ம் வருடம் ஜீன் திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

**அ.வ.எண்.334/2020 இல் இ.ம.எண்.01/2020**

ஆனைமலை தாலூக்கா, ஆனைமலை தேவேந்திரன் வீதி (பள்ளர் தெரு தெற்கு), கதவு எண்.38, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.குப்புச்சாமி மகன் சுமார் 34 வயதுள்ள திரு.தங்கராஜ்.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

ஆனைமலை தாலூக்கா, ஆனைமலை அண்ணா நகர், கோபாலபுரம், என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.மணிகண்டன் மனைவி சுமார் 45 வயதுள்ள திருமதி.ஜோதிமணி.

.... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

மனுதாரர் / வாதி தனது தாவா வீட்டின் வடபுறத்து சுவற்றையும், வடபுறத்து சுவரை சிமெண்ட் பூசியும், வடபுறத்தில் காம்பவுண்ட் சுவற்றை கட்டியும் எப்போதும் போல் சுண்ணாம்பு பூசுவதையும், பராமரிப்பு செய்வதையும் எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 03.11.2020

இம்மனுவானது கடந்த 18.042022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்

/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சந்திரசேகர் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

## சொத்து விபரம்

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், 807A1A1A1A1 நெ.ஆனைமலை ஊர்க்கட்டில், முன்பு தேவேந்தரர் வீதி, தற்போது பள்ளர் தெரு, வார்டு எண்.2, உள்ள காலியிடம் வகையறா சொத்துக்களுக்கு சக்குபந்தியும், அளவுகளும்,

கிழமேல் ரோட்டுக்கும் .... வடக்கு

தென்வடல் ரோட்டுக்கும் .... கிழக்கு

பரப குடும்பன் வீட்டிற்கும் .... மேற்கு

மாகாளி வீட்டிற்கும் .... தெற்கு

இதன் மத்தியில்,

மேதலை தென்வடலடி .... 15 ¾

கிழதலை தென்வடலடி .... 15 ¾

வடதலை கிழமேலடி .... 27 ¾

தென்தலை கிழமேலடி .... 32.25

இந்த அளவுள்ள 472 ½ சதுரடி அல்லது 44 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனையிடமும், மேற்படி இடத்தில் தற்போது கட்டியுள்ள வீடு மற்றும் மின் இணைப்பு, கதவு, நிலவு, கட்டுக்கோப்பு இதற்குண்டான மாமூல் வழி நடை தட பாத்தியங்கள் சகிதம். மின் இணைப்பு எண்.03-328-006-2650, கதவு எண்.38.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஜீன் மாதம் 10ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**இறுதி உத்தரவு**

அ.வ.எண்.334/2020

இல்

இ.ம.எண்.01/2020

நாள் : 10.06.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------